CC No. 577/2023 PW3 24.06.2025.

திரு. ஜெயக்குமார் த/பெ. அய்யனார்

சாட்சி Crl.M.P No.484/2025 மனுவில் 17.06.2024 ஆம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி மீண்டும் அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:

நான் மருத்துவமனைக்கு வந்தபோது மருத்துவரிடம் எனக்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது என்று நான் தான் கூறினேன். ராஜ்குமாரும் 2 பேரும் சேர்ந்து தாக்கினார்கள் என்று கூறினேன். போலீசார் என்னை என்றைய தினம் விசாரித்தார்கள் என்று எனக்கு தெரியாது. போலீசாரிடமும், ராஜ்குமாரும் இரண்டு பேரும் சேர்ந்து தாக்கினார்கள் என்று கூறினேன். வீட்டின் ஓட்டை அடித்து உடைத்தார்கள் என்ற விவரத்தையும் நான் போலீசாரிடம் கூறினேன். போலீசார் விசாரித்து என்னிடம் வாக்குமூலம் வாங்கி கொண்டார்கள். ஆஜர் எதிரி ராஜ்குமாரை நாங்கள் வெட்டியதாக எங்கள் மீது வழக்கு உள்ளது என்றால் சரிதான். என் வீட்டை சுற்றி வீடுகள் உள்ளது. சுமார் 60 வீடுகள் உள்ளது. நான் என் முன் விசாரணையில் சொல்லியுள்ளது போல் சொன்ன நாள், நேரம், இடம், விதத்தில் ஆஜர் எதிரிகள் என்னை தாக்கவில்லை என்றாலும், ஆபாசமாக பேசி கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. ஆஜர் எதிரியை வெட்டியதாக என் மீது உள்ள கொலை முயற்சி வழக்கிலிருந்து தப்பிக்க வேண்டியே நான் இந்த வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்டுள்ள காயம் எதிரியால்

ஏற்படவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக எதிரிக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him to be Correct.*

D SHANMUGA PRIYA

Digitally signed by D SHANMUGA PRIYA
Date: 2025.06.24 17:35:35 +0530

*Chief Judicial Magistrate,*

*Thanjavur at Kumbakonam.*